When only
The best is
Good Enough



Buy
Solide Pumps

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர் 5: பிரமோதூத ஞு ஆனி மீ 10 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 01 (25 - 06 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 122

### செஞ்சிலுவைச் சங்க ஏற்பாட்டில் முதற்தொகுதி

# உணவு, மருந்துகள் இன்று யாழ்நகர் வரும்!

## தொடர்ந்து எடுத்து வரவும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 25

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் உணவு, மருந்து வகைகள் உட்பட அத்தியாவசிய பொருள்களின் முதற்தொகுதி இன்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும்.

இரண்டு செஞ்சிலுவை வாகனங்கள் இந்தப் பொருள்களை ஏற்றிக்கொண்டு இன்று காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும்.

அத்தியாவசியப் பொருள்களை தொடர்ந்தும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச குழு ஏற்பாடு செய்திருக்கிறது.

இன்று யாழ். நோக்கிப் புறப்படும் இந்த வாகனங்களில் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அதிகாரிகள் வடக்கில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வைத்திய, நிவாரண வேலைகளச் செயற்படுத்துவதற்கு பொறுப்பாக இருப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இன்றுவரும் முதல் தொகுதி அத்தியாவசிய பொருள்களில் மருந்து வகைகள் மற்றும் அரிசி, [சீனி, மா போன்ற பொருள்கள் அடங்கியிருக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

அத்தியாவசிய பொருள்களை ஏற்றிவரும் வாகனங்கள் இன்று மாலை யாழ்ப்பாணத்தை வந்தடையும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்த அத்தியாவசிய பொருள்களை செஞ்சிலுவைச் சங்கத்தினரே நேரடியாக பொதுமக்களுக்கு விநியோகிப்பார்கள் என்றும் கூறப்பட்டது. (உ-3)

## 40 ஆயிரம் தமிழ் அகதிகள் மடுப் பகுதியில் பரிதவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

வவுனியா நகரையும் அதை அண்டியுள்ள கிராமங்களையும் சேர்ந்த சுமார் நாற்பதாயிரம் தமிழ் மக்கள் உணவு உடை வசதியின்றி மடுவில் அமைந்துள்ள அகதி முகாமில் பரிதவிப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா நகரத்தில் இடம்பெறும் மோதல்களைஅடுத்து நகர்ப்பகுதியில் இருந்தும் நகரைச் சுற்றியுள்ள செட்டிகுளம், ஓமந்தை உட்பட

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



ஏஜன்சிச் செய்தியள் சொல்லுறதைப் பார்த்தால் கொழும்பும் கொஞ்சம் சூடாகிக்கொண்டு வருகுது போலை......கிடக்கு... இல்லையே...?

## திருமலை வவுனியாவுக்கு ரஞ்சன்

கொழும்பு, ஜூன் 25

பாதுகாப்பு துணை அமைச்சர் திரு.ரஞ்சன் விஜேரத்னா நேற்று திருகோணமலைக்கும் வவுனியாவுக்கும் விஜயம்செய்தார்.

இரு மாவட்டங்களிலும் உள்ள யுத்த-பாதுகாப்பு நிலைமைகள் குறித்து அந்தந்தப்பகுதிப் படை உயர் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார்.

யுத்த நடவடிக்கைகள் பற்றிய சில முக்கிய திட்டங்கள் குறித்து ஆராய்ந்ததாகவும் தெரியவருகிறது. (அ)

# 3 ஆம் கட்டையிலிருந்து முன்னேறும் முயற்சியில் இராணுவம் தோல்வி

## திருமலையில் சண்டை தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 25

திருகோணமலை 3 ஆம் கட்டையடியில் விடுதலைப் புலிகளுககும் இராணுவத்துக்கும் இடையில் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருகிறது. இராணுவம் 3 ஆம் கட்டையிலிருந்து சிறிதும் முன்னேற முடியாத நிலையில் இருந்து வருகிறது.

இந்தச் சண்டையில் பொம்மர்கள், ஹெலிகள் பெரும் அளவுபாவிக்கப் படுகின்றன.

கடந்த 10 நாள் சண்டையில் இராணுவத்துக்கு பெரிய இளப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் 2ஆம் கட்டைப் பகுதியில் இருந்து வெளியேறிய முஸ்லிம் மக்களை மீளவும் அங்கு வந்து குடியேறும்படி இராணுவம் அழைப்பு விடுத்துள்ளது, (இ)

## வவுனியா ஆஸ்பத்திரி நெடுங்கேணியில்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வவுனியா ஆஸ்பத்திரி மூடப்பட்டு நெடுங்கேணிக்கு மாற்றப்பட்டுள்ளது.

நெடுங்கேணி அரசினர் வைத்தியசாலையுடன் வவுனியா ஆஸ்பத்திரி இணைக்கப்பட்டுள்ளது. வவுனியா ஆஸ்பத்திரி டாக்டர்களும், பணியாளர்களும் நெடுங்கேணியில் கடமையாற்றுகிறார்கள். (ஒ-3)

### அகதிகள் நிலைகுறித்து ஆராய

## செஞ்சிலுவை வைத்திய குழு முல்லைத்தீவுக்கு விரைகிறது

திருகோணமலையில் இருந்து வந்துள்ள அகதிகளினதும், கொக்காவில். நாயாறு ஆகிய பகுதிகளில் இருந்து வந்துள்ள அகதிகளினதும் நிலைமைகளை ஆராய்ந்து உதவுவதற்கென யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தைச்சேர்ந்த வைத்தியக் குழு ஒன்று இன்று திங்கட்கிழமை முல்லைத்தீவுக்குச் செல்கிறது.

முல்லைத்தீவு, செம்மலை ஆகியபகுதிகளில் ஆயிரக்கணக்கில் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர்.

அவர்களுக்கு சுகாதார வசதிகள் போதிய அளவு இல்லை என்று கிடைத்த தகவலை அடுத்து பத்து வைத்தியர்கள், தொண்டர்கள் கொண்ட குழு ஒன்று இன்று அங்கு செல்கிறது. (ஒ-3)

### சுப நேரம்

25-6-90

திங்கட்கிழமை ஆனி 11

சுபநேரம்!

11-55—01-25

இராகுகாலம்

07-25—08-55

# காரைநகரில் நேற்று பொம்மர் குண்டு வீச்சு!

காரைநகர், ஜூன் 25

காரைநகர் கடற்படை முகாமை அண்டிய பகுதிகளில் நேற்றுக் காலை பத்து மணியளவில் பொம்மர்குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

முகாமைச் சூழவுள்ள பகுதிகளான துறைமுகம், தோப்புக்காடு, பலகாடு, ஊர்காவற்றுறைப்பகுதியில் உள்ள பருத்தியடைப்புப் பகுதிகளை இலக்கு வைத்தே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஹெலி ஒன்றும் பொம்மருக்கு உதவியாக தாக்குதலில் ஈடுபட்டது.

பொம்மர் தாக்குதல் ஓய்ந்த பின்னர் முகாமிலிருந்து கடுமையான பீரங்கி, ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

படையினர் வெளியேவரும் முயற்சிக்கு உதவியாகவே நேற்றைய பொம்மர், ஹெலி மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடைபெற்றதாகக் கூறப்பட்டது.

எனினும் போராளிகளின்

( 3 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள குடும்பங்களுக்கு "ஷொட் கன்" விநியோகம்

வவுனியாச் சம்பவங்களையடுத்து அங்குள்ள சிங்களக் குடும்பங்களின் பாதுகாப்புக்காக அந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 'ஷொட்கன்' வழங்கப்பட்டுளளது.

மதவாச்சி, செட்டிகுளம், வவுனியா பகுதியில்வாழும்சிங்கள மக்களுக்கே படையினர் ஷொட்கன்களை வழங்கியுள்ளனர்.

சிங்கள மக்களுக்கு இராணுவம் பாதுகாப்பும் வழங்கி வருகிறது. (உ-3)

## கிளிநொச்சி அரச அதிபர் அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 25

கிளிநொச்சி மாவட்டத்தில் உணவு, மருந்துப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. உடனடியாக உணவு மருந்துப் பொருள்களை அனுப்புங்கள்.

—இவ்வாறு கிளிநொச்சி அரசஅதிபர் திரு.கே.மாணிக்கவாசகர் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து திரு. மாணிக்கவாசகர் வயர்லஸ் மூலம் உணவுக்கட்டுப்பாடு ஆணையாளருக்கு இந்த அவசர கோரிக்கையை விடுத்தார். (ஒ-3)

# அத்தியாவசிய பொருள்களை தருவிக்க அரச அதிபர் முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்சளை உடன் தருவிக்கும் முயற்சியில் யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் ஈடுபட்டிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் இன்று காலை அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. சரித்தரத்வத்தையுடன் தொடர்பு கொண்டு பேசுவார்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதராலயத்தின் யாழ். அலுவலகத்தில் உள்ள விசேட வானொலி கருவகள் மூலம் அவர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் தொடர்பு கொள்வார் என்று அறிய வந்தது.

குடாநாட்டிற்கு, மூன்று மாத பாவனைக்குத் தேவையான மா, சீனி, அரிசி, எரிபொருள் உட்பட அத்தியாவசிய பொருள்களை உடன் அனுப்பி வைக்குமாறு திரு. சரித்தரத்வத்தையை யாழ். அரச அதிபர் கோருவார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## புல்மோட்டையில் கண்ணி! 15 படையினர் உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம், ஜூன் 25

திருகோணலை மாவட்டம் புல்மோட்டையில் கடந்தசனியன்று விடுதலைப்புலிகள் நடத்திய கண்ணிவெடித்தவக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவப் படையைச் சேர்ந்த 15 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் 13 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலை தெரிவித்தன. (உ-9)

### கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள

# ஈரோஸ் அலுவலகங்கள் படையினரால் முற்றுகை!

## 27 பேர் கைது செய்யப்பட்டனர்

கொழும்பு, ஜூன் 25

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள ஈழவர் ஜனநாயக முன்னணியின் (ஈரோஸின்) இரண்டு அலுவலகங்களைப் படையினர் நேற்று முற்றுகையிட்டனர்.

அச்சமயம் அலுவலகங்களில் இருந்த 27 பேரையும் பொலீஸார் கைது செய்தனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் அரச படையினர் இந்த அலுவலகங்களைச் சுற்றி வளைத்தனர். அதனையடுத்து அங்கிருந்தோர் கைது செய்யப்பட்டனர்.

அலுவலகங்களில் படையினர் பலத்த சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்றும்—

அலுவலகங்களில் இருந்த தஸ்தாவேஜுக்கள் துருவித் துருவி ஆராயப்பட்டன -என்றும் கூறப்பட்டது.

நேற்று மாலையில் இந்த இரு அலுவலகங்களிலும் படையினரே நிலைகொண்டிருந்ததாக அறியவந்தது. (உ-9)

## தமிழ் எம்.பிக்களுக்குரிய ஆயுதங்கள் பறிமுதல்

கொழும்பில் தங்கியிருக்கும் தமிழ் எம். பிக்களின் மெய்ப் பாதுகாவலர்களுக்கு என வழங்கப் பட்டிருந்த ஆயுதங்களை அரசாங்கம் பறிமுதல் செய்திருக்கிறது.

விடுதலைப் புலிகள்—அரச படைகள் மோதல் ஆரம்பமானதையடுத்து ஈரோஸ் எம். பிக்களின் மெய்ப் பாதுகாவலர்களுக்கு என வழங்கப்பட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட எம். பிக்களுடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

# பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு துண்டுப்பிரசுரம்

## விமானத்திலிருந்து படையினர் வீசினர்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடக்கு- கிழக்கில் உள்ள பலட முகாம்களை அண்டியுள்ள பகுதிகளில் வாழும் பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்லுமாறுபடையினர் கேட்டுள்ளனர்.

இவ்வாறு கேட்கும் துண்டுப் பிரசுங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் பலாலி, காங்கேசன் துறை, யாழ். கோட்டை, காரைநகர் ஆகிய இடங்களுக்கு சமீபமாகஉள்ள இடங்களில் கடந்த புதன் கிழமை இரவு விமானத்தில் இருந்து கீழே போடப்பட்டன.

''எல்லா ஊர்வாசிகளுக்கும்'' என்ற தலைப்பிலான அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

விடுதலைப் புலிகள் உங்கள் பகுதிகளிலுள்ள முகாம்களில் வாழும் இராணுவ வீரர்களுக்கு உணவு, நீர் போன்றவற்றை எடுத்துச் செல்ல

(4 ஆம் பக்கம் பார்க்கம்)

## கோட்டைக்கு ஹெலி மூலம் பொதிகள் போட முயற்சி!

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். கோட்டைப் பகுதிக்கு மேலாக அதிக உயர்த்தில் பறந்த ஹெலிக்கொப்டர்களில் இருந்து நேற்று நான்கிற்கும் அதிகமான பொதிகள் போடப்பட்டன.

இந்தப் பொதிகள் யாழ். கோட்டை முகாமுக்குள் விழுந்தனவாஎன்பதை அறிய முடியவில்லை.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

யாழ் கோட்டைப்பகுதியை நோக்கி இரண்டு ஹெலிகள் வந்தன. ஒரு ஹெலி சுற்றிச் சுற்றிப் பறந்து கோட்டையைச் சூழவுள்ள பகுதிகளை நோக்கி தாக்குதல்களை நடத்த-

மற்ற ஹெலி மிக உயரத்தில் இருந்தவாறு பொதிகளைக் கீழே போட்டது.

முற்றுகையிடப்பட்டிருக்கும் யாழ். கோட்டைக்குள் சிக்கியுள்ள படையினருக்கு உணவு, மருந்துகள், மற்றும் ஆயுதங்கள் போன்றவற்றை இந்தப் பொதிகள் மூலம் போட படையினர் முயன்றதாக நம்பப்பட்டது. [உ]

## கிளிநொச்சியில் சனியன்று ஷெல் தாக்கி மூவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுக்கு மூன்று பேர் பலியானார்கள். 10 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

ரஞ்சித் (வட்டக்கச்சி), நவசீலன் (முரசுமோட்டை), சுந்தர்ராஜா ஆகியோரே இவ்வாறு ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களாவர்.

செ. அரசப்பன், சிவராஜா, ராஜ்குமார், மருதவேல், ராமகிருஷ்ணன், சுப்பிரமணியம், ராமையா, ரவீந்திரன், ரவிச்சந்திரன், சோமு ஆகியோர் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர். (உ-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (சின்னஞ்சிறு விளம்பரம்)

**வாடகைக்கு**

சிங்கப்பூர், இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய தலை நகை சோடனை செற் எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம் தொடர்பு ராசி சில்க்ஸ் 70, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம்

[ச/4559]

**தவறிவிட்டது**

திருகோணமலையில்இருந்து மினிபஸ்ஸில் யாழ் வரும் போது சிகப்புநிற சூட்கேஸ் தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (13468)

## வவுனியாவில் 4 படையினர் மரணம்

கொழும்பு, ஜூன் 25 வவுனியா, பெரிய குளம் பகுதியில் ஆயுதபடையினர் விடுதலைப்புலிகள் மோதலில் 4 ஆயுதப்படையினர் கொல்லப்பட்டனர்; 34 பேர் காயமடைந்தனர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் கூறின என்று இந்திய வானொலி அறிவித்தது.

## தொண்டமான் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு ஜூன் 25 கொழும்பில் இருந்து வெளிவரும் சண்டே டைம்ஸ் வாரப்பத்திரிகைக்கு அமைச்சர் தொண்டமான் அளித்த பேட்டி ஒன்றில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் சில வருமாறு;

'' விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள்நடத்துவது வீணாகும். அவர்களை நம்ப முடியாது.

எதைச் செய்ய நினைத்தாலும் அதனை விரைவில் செய்ய வேண்டும்''

## ஆலயங்களில் உற்சவங்கள் ஒத்திவைப்பு

புங்குடுதீவு, ஜூன் 25 தற்போதைய நிலைமை காரணமாக தீவுப்பகுதிகளில் சில ஆலயங்களில் உற்சவங்கள் பின்போடப்பட்டுள்ளன.

இம் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமாக இருந்த புங்குடுதீவு பிட்டியம்பதி ஸ்ரீ காளிகாபரமேஸ்வரி அம்பாள் உற்சவம், 23 ஆம் திகதி ஆரம்பமாக இருந்த நயினாதீவு நாகபூசணி அம்பாள் உற்சவம், 25 ஆம் திகதி ஆரம்பமாக இருந்த குறிகாட்டுவான் பேச்சி அம்மன் ஆலய உற்சவம் ஆகியவையே பின்போடப்பட்டுள்ளன.

(இ 131)

## ஒரிஸ்ஸா அகதிகள் இடமாற்றம்

பாட்னா, ஜூன் 25 ஒரிஸ்ஸா மாநிலத்தில் சங்க வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளில் சுமார் 400 பேர் பெயர் சொல்லப்படாத இடம் ஒன்றுக்கு மாற்றப்பட்டனர்.

போட்டிப் போராளிக்குழுக்களின் தாக்குதலுக்கு இலக்காக கூடும் என்ற அச்சத்தின் பேரில் அவர்கள் அதிகாரிகளால் இடமாற்றம் செய்யப்பட்டனர் என்று ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

## என்.எம்.ஜா இலங்கைக்கான இந்தியத்தூதர்

கொழும்பு ஜூன் 25 இந்தியாவின் புதிய தூதராக இலங்கையில் திரு என் எம் ஜா என்பவர் நியமிக்கப்படவிருக்கிறார்.

இவர் இப்போது யுகோஸ்லேவியாவில் இந்தியத் தூதராக பணியாற்றி வருகிறார்

இதுவரை இந்தியத் தூதராக பணியாற்றி வந்த திரு எல். எல். மெஹ்ரோத்திரா இந்திய வெளியுறவு அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே. பதில் தூதராக திரு. ராத் என்பவர் தற்சமயம் பணிபுரிந்து வருகிறார்.

இலங்கை நெருக்கடி மோசமடைந்து வருவதைத் தொடர்ந்தே நிரந்தர தூதுவராக திரு. ஜா நியமிக்கப்படுகிறார். என்று தெரிகிறது.

# கிளிநொச்சி நகரில் உள்ள 4 பாடசாலைகள் இயங்கவில்லை

### ஆசிரியர்கள் கடமைபுரிய மாற்று ஏற்பாடு

கிளிநொச்சி, ஜூன் 25 கிளிநொச்சியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து, நகரிலுள்ள 4 பாடசாலைகள் இன்னும் இயங்காமல் உள்ளன. மாணவர்கள் சமுகம் தராததே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தபாடசாலைகள் இயங்க முடியாது உள்ள நிலை தொடர்பாகவும், ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயவென கடந்த வெள்ளிக்கிழமை புனித திரேசா மகளிர் கல்லூரியில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அந்தக் கூட்டத்துக்கு கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சுந்தசாமி தலைமை வகித்தார். கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டக் கொத்தணி அதிபர்கள், கல்வி அலுவலக அதிகாரிகள் ஆகியோரும்கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கல்விப் பணிப்பாளர் தெரிவித்ததாவது:—

இம்மாவட்டத்தில் நகரத்தில் உள்ள நான்கு பாடசாலைகள் தவிர ஏனைய பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன. நான்கு பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் தமது வரவைப் பதிவு செய்து வருகின்றனர். மாணவர்கள் வருகை தரவில்லை. தொடர்ந்தும் இந்நிலை நீடிக்குமானால் இந் நான்கு பாடசாலைகளிலும் ஆசிரியர்களை அவர்களது சம்மதத்துடன் அயற்பாடசாலைகளுக்கு நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிநகரின் தற்போதைய நிலைமைகளை உத்தேசித்துகல்வி அலுவலகம் தற்காலிகமாக பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத் தில் இயங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்தும் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் இடம் பெயர்ந்து வந்த மாணவர்கள் பாடசாலைகளில் அனுமதி கோரும் இடத்து அவர்களைத் தற்காலிகமாக வகுப்புக்களில் அனுமதித்து அவர்களது வரவுகளைப் பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் மதிய உணவு கொண்டு வரும் இடத்து அதற்குரிய கொடுப்பனவுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. - என்றார். (ஓ-76)

## மகாவிஷ்ணு பாடசாலையில் அகதிகள்

யாழ்ப்பாணம் ஜூன் 25 கைதடி -நாவற்குளி மகாவிஷ்ணு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சுமார் 40 குடும்பங்கள் வரை அகதிகளாகத் தங்கி உள்ளன.

இந்த குடும்பங்களில் அனேகமானவை கரையூர் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவை ஆகும். (இ)

## இந்திய பீரங்கிப் படகுகள்

புதுடில்லி, ஜூன் 25 பாக்குநீரிணையில் இந்தியக்கடற்படையினரின் பீரங்கிப்படகுகள் தீவிர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக புதுடில்லியில்இந்தியக் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-எ)

## வல்வையில் பீரங்கித்தாக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 25 நேற்று மாலை 5 மணியளவில் வல்வெட்டித்துறைக் கடலிலிருந்து கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலினால் இரண்டு பிளாஸ்டிக்வள்ளங்கள் எரிந்து சேதமாகின.

ஷெல் தாக்குதல்களினால் மின் கம்பிகள் அறுந்து மின் விநியோகம் தடைப்பட்டது.

## திருத்தப்பட்ட தண்ணீர் தாங்கி

பளை அரசினர் வைத்தியசாலை தண்ணீர் தாங்கியில் பல காலமாக இருந்துவந்த வெடிப்புக்கள் செல்வபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் சிரமதான அடிப்படையில் திருத்தம் செய்யப்பட்டன. (இ-117)

## பச்சிலைப்பள்ளி வட்ட அவை

பச்சிலைப்பள்ளி, ஜூன் 25 பச்சிலைப்பள்ளி வட்ட அவை தெரிவுக் கூட்டம் அரசியல் பொறுப்பாளர் செல்வராசா தலைமையில் பளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் தலைமைக் காரியாலய அரசியல் அமைப்பாளர் செங்கதிர், தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் கி. பாப்பா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

பச்சிலைப்பள்ளி வட்ட அவை தலைவராக அதிபர் பொன். தில்லை நாயகமும், செயலாளராக மு. குமாரவேலுவும், பொருளாளராக பொ. பரமசாமியும், ஏழு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## அகதிகளுக்கு உதவும் தொண்டர் நிறுவனங்கள்

தற்போது வடக்கு-கிழக்கில் அகதிகளாக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவ விரும்பும் தொண்டர் நிறுவனங்கள் கொழும்பு சமூகசேவைத்திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது. (இ-எ)

## மோதல் நடக்கும் இடங்களில் மின் இணைப்பு துண்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25 யாழ். மாவட்டத்தில் மோதல்கள் இடம் பெற்று வரும் பகுதிகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

மோதல்கள் நடைபெற்று வரும் பலாலி, காங்கேசன் துறை, காரைநகர் பகுதிகளில் இடம்பெற்ற ஷெல், பொம்மர், ஹெலித்தாக்குதல்களினால் வயர்கள் எல்லாம் சேதமடைந்துள்ளன.

இதைத் தொடர்ந்து அப்பகுதிகளுக்கான மின் விநியோகம் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. (இ-3)

## கொக்குவில் - கோண்டாவில் பகுதிகளிலும் அகதிகள்

கொக்குவில், ஜூன் 25 யாழ் நகரில் இடம் பெறும் ஷெல், மற்றும் பொம்மர் ஹெலித்தாக்குதல்களைத் தொடர்ந்து இடம் பெயர்ந்த மக்களில் பலர் கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்,

கொக்குவில் கிழக்கு கிராம சேவகர் பிரிவில் 51 குடும்பங்களைச் சேர்ந்த 250 பேர் வரை தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர் இவர்கள் யாழ். நகர், காங்கேசன் துறை, மன்னார் ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்து உறவினர்கள், நண்பர்கள் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்கள் திருநெல்வேலி ப. நோ. கூ. சங்கத்திலிருந்து நிவாரணப் பொருள்களைப் பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (இ-69)

### யாழ். குடாநாட்டிலுள்ள

## அகதிகளின் எண்ணிக்கை அரசுக்குத் தெரியாதாம்

கொழும்பு, ஜூன் 25 யாழ். குடாநாட்டில் எவ்வளவு அகதிகள் உள்ளனர் என்பது பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள முடியாதிருப்பதாக அரசு அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்புகொள்ள முடியாதபடி அனைத்துத் தொடர்பு சாதனங்களும் துண்டிக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணம் என்று அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். என்று கூறப்பட்டது (ஓ எ)

## சர்வதேச சமூகத்தின் உதவியை நாடுகிறது இலங்கை அரசு

கொழும்பு, ஜூன் 25 விடுதலைப் புலிகளுடனான தனது யுத்தத்தில் சர்வதேச சமூகத்தினர் ஆதரவும் உதவியும் அளிக்கவேண்டும் என்று இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இலங்கையின் வெளிநாட்டு நண்பர்களிடமிருந்து பொருளாதார உதவியும் தார்மீக ஆதரவும் இலங்கைக்குக் கிடைக்கும் என்று நம்புவதாக அரசு அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

## நான்கு பிள்ளைகளுடன் 8 நாட்களாக நடந்தபெண்!

### திருமலையிலிருந்து முல்லைத்தீவுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 25 திருகோணமலையில் 13 ஆம் திகதி மாலை 6 00 மணி அளவில் பொலீஸ் நிலையம் தாக்கப்பட்டது. 14 ஆம் திகதி அதிகாலை இரண்டரை மணியளவில் நானும் எனது நான்கு பிள்ளைகளும், திருகோணமலை நகரில் இருந்து வெளியேறினோம், நிலாவெளி, இறக்ககண்டி, கும்புறுப்பிட்டி, திரியாய் கொக்குத்தொடுவாய் வழியாக நடந்து வந்து 22 ஆம திகதி மாலை 6 30 மணியளவில் முல்லைத்தீவை அடைந்தோம்.

திருகோணமலை நகரைச் சேர்ந்த திருமதி சி ரங்கநாயகி நேற்றுமாலை நல்லூரில் தனியார் வீடு ஒன்றில் வைத்து செய்தியாளர்களிடம் மேற்கண்ட விவரங்களைத் தெரிவித்தார்.

இப் பெண்ணும் இவரது நான்கு பிள்ளைகளும் முல்லைத்தீவில்உள்ள சிலாவத்தை மாதாகோவிலில் இரவைக் கழித்துவிட்டு நேற்று அதிகாலை முல்லைத்தீவில் இருந்து மினிபஸ் ஒன்றில் புறப்பட்டு மாலை நல்லூர் கந்தசுவாமி கோயிலை வந்தடைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு உறவினரும் இல்லாத இவர்கள், கோயிலைத் தரிசிக்க வந்த பெண் ஒருவரால் நல்லூரில் உள்ள அவரது வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டு நேற்று இரவு தங்க வைக்கப்பட்டனர்.

இன்று இவர்களை அகதி முகாம் ஒன்றி[illegible] போய்ச் சேர்ப்பதற்கு முடிவாகி இருந்தது. [illegible]

## மரணச் சடங்கும் நன்றி நவிலலும்

**சரவணமுத்து இராசையா**

அளவெட்டி அழகொல்லை (கொட்டடி)

காலம் சென்ற சரவணமுத்துவின் மகனும், நாகநாதர், விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சின்னம்மாவின் அன்புக் கணவரும், நம்பியாரூரன் (கொலண்ட்), நாகேஸ்வரி (லண்டன்), ஞானேஸ்வரி (ஆசிரியை கொழும்பு), திருவாதவூரன், செந்தூரன், இராஜேஸ்வரி [லண்டன்], நாகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பொ. கணேஸ்வரன், தி. பவானி ஆகியோரின் மாமனாரும், ஆரணி, திலானி, கண்ணா, உமாநிதன் ஆகியோரின் பேரனுமான திரு. சரவணமுத்து இராசையா 22 - 06 - 1990 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் மரணச் சடங்கில் 23-06-1990 சனிக்கிழமை கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி நவில்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

அழகொல்லை,
அளவெட்டி.

(13473)

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொன்னம்பலம் திருச்சிற்றம்பலம்**
(உதவிப்பணிப்பாளர் சுங்கத் திணைக்களம் கொழும்பு)

தோற்றம்: 14 - 03 - 1931
மறைவு: 05 - 07 - 1989

திதி: 25 — 06 — 1990

ஆண்டு ஒன்று சென்றும் இன்னும் நீங்கவில்லை எம் துயர் அலைகள், ஆவி விடுத்துப் போன பின்பும் நாம் ஆயிரமாய்க் கலங்குகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரி, உறவினர்.

''குபேரவாசா''
சருசம் பானை,

42, நெல்சன் வீதி,
கொழும்பு - 6

[13501]

## ஸ்தாபன இடமாற்றம்

20 - 06 - 1990 முதல் எமது ஆர். வி. ஜி பீடி ஸ்தாபனத்தை நம். 58, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் விலாசத்தில் மாற்றி அமைத்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளர், விற்பனையாளர், ஆதரவாளர் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகிறோம்.

இங்ஙனம்:
**ஆர். வி. ஜி. பீடி நிர்வாகம்,**
58, நல்லூர் குறுக்குத் தெரு.
யாழ்ப்பாணம்.

[13459]

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தவனம் பரமானந்தம்**
நெல்லியடி

தோற்றம்: 30 - 06 - 1925
மறைவு: 06 - 07 - 1989

எமது நினைவை விட்டு அகலாத அன்புச் சுடரே! தாங்கள் பிரிந்து ஓராண்டு சென்றாலும் தங்கள் நினைவு என்றைக்கும் எம்மைவிட்டு அகலாது. தங்கள் ஆத்ம சாந்திக்காக இன்று வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் அனாதைப் பிள்ளைகளுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது இந்த வைபவத்திலும் எமது இல்லத்தில் நடைபெறும்மதியபோசனத்திலும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மனைவி; திருமதி பாக்கியம் பரமானந்தம்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரங்கள்.

பரமானந்தம் வேலன்,
[illegible]

(13460)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**சடையர் பரமு**

பிறப்பு: 08 - 10 - 1917
இறப்பு: 26 - 05 - 1990

அன்பினால் எம்மை ஆட்சி செய்து
ஆல விருட்சமாய் எங்களுக்கு நிழல் தந்து
உன்புகழே நடமாட நீ மறைந்த ஐயாவே
நினைவதனை என்றுமினி மறக்குவமோ
இன்றெமது சிரந்தாழ்த்தி உனதான்மா
சாந்தியுற இறைபாதம் ஏத்துவமே!

உங்கள் நினைவால் வாடும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மட்டுவில் நாடு கிழக்கு,
பூநகரி.

[3883]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இதுவும் ஒரு சாபக்கேடே!

கிழக்கு மக்களுக்கு உணவு வகைகள் கிடைக்க முடியாத நிலை இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வடபகுதிக்கும், உணவுப் பொருள்களை வெளிமாவட்டங்களில் இருந்துகொண்டு வருவதற்கு, இடை நடுவில் பல தடங்கல்கள் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வாகனங்களில் உணவுப் பொருள்களைக் கொண்டு வர முயற்சித்த போது, வழியில் வவுனியாவுக்கு அப்பால் இரண்டாம் பேர்வழிகள் தமதாக்கிக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

எனவே வடக்கு -கிழக்கில் உணவு மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருள்களுக்கு பற்றாக்குறை உண்டாகும் ஆபத்து உண்டு.

வடக்கு - கிழக்கில் எட்டு மாவட்டங்கள். அவை ஒவ்வொன்றிலும் அத்தியாவசியப் பொருள் ஒவ்வொன்றினதும் வழமையான பாவனைத் தேவை எவ்வளவு;அரசின் கையிருப்பில் உள்ளது எவ்வளவு; தனியார் கையிருப்பில் உள்ளது எவ்வளவு என்ற விவரங்கள் எந்த அதிகாரிக்கும் சரியாகத் தெரிவதாக இல்லை. அவ்வாறு ஒரு தரவு நிலைக் கணக்கு அரசாங்க அலுவலகங்களால் வைத்திருக்கப்படுவதாகவும் தெரியவில்லை.

இந்த நிலையில் போதிய கையிருப்பு இருக்கிறது என்றோ அல்லது தேவையானதைத் தருவிக்க முடியும் என்றோ உறுதியாக நம்பமுடியாத நிலை உருவாகியுள்ளது. அதன் காரணமாக வடக்கிலும், கிழக்கிலும் உணவுப் பஞ்சம் ஏற்படும் என்ற அச்சம் தானாகவே வருகிறது.

யுத்தம் தமிழர்களுக்கு எதிரானதல்லஎன்கிறது அரசாங்கம். ஆனால் தமிழ்ப் பகுதிகளுக்கு உணவு மற்றும் எரிபொருள் ஆகிய அத்தியாவசியப் பொருள்களை அனுப்ப உகந்த நடவடிக்கை எடுத்ததாக இல்லை. அத்தியாவசிய சேவைகளுக்கு அதிகாரிகளை நியமிப்பதோடு அது நிற்கிறது.

மேலும், சிறு அசம்பாவிதம் என்றாலும், நாட்கணக்காக அலுவலகங்களை எட்டியும் பார்க்காத தன்மை தமிழ்ப் பகுதி ஊழியர்களுக்கு உண்டு. போக்குவரத்து வசதிகுறைந்து விட்டால் அதனை ஒரு சாட்டாக வைத்துக் கொண்டு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கூட அலுவலகப் பக்கம் "தலை வைத்தும் படுக்க மாட்டார்கள்"!

ஒரு சிறு உதாரணம் பாருங்களேன்: கடந்த பதினாறாம் திகதி யாழ்ப்பாணம் நகரத்தில் ஓர் அசம்பாவிதம் நடந்தது சம்பவம் நடந்த பொயகடைப் பகுதிக்கு அப்பால் உள்ள இடங்களில் இயங்கும் பல அலுவலகங்கள் கூட கடந்த ஒரு வாரமாக இயங்கவில்லை; ஊழியர்கள் வரவில்லை, இன்று திங்கட்கிழமை வருமாறு பத்திரிகைகள் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டது.

ஒவ்வொருவரும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியம்தான். ஆனால் எங்கே ஒரு சாட்டு வரும் அதனைக் காரணமாக வைத்து வீட்டில் பாதுகாப்பாக இருந்துவிடுவோம் என்று எம்மவர்கள் எண்ணுகிறார்கள்! எமன் நினைத்தால் ஏதோ ஒரு வடிவத்தில் வீட்டுக்கும் வந்து தொலைப்பான் என்பது பலருக்குப் புரிவதில்லை!!

அலுவலகங்களுக்குச் சமீபமாகவாழ்பவர்களைக் கூட பத்திரிகைகளில் விளம்பரமும் செய்தியும் போட்டு கடமைக்கு வாருங்கள் என்று அழைக்கும் அளவுக்கு நிலைமை இருப்பது தமிழனுக்கு ஒரு சாபக்கேடின்றி வேறு ஏது?

உத்தியோகம் புருஷ லட்சணம்; மாதம் தவறாமல் சம்பளம் கிடைக்கும். இவற்றைத் தவிர மக்களுக்குச் சேவை' புரிய வேண்டிய கடமைப்பாடும் தமக்கு உண்டு என்பதைப் பலரும் மறந்து விடுவது ஏனோ?

# தமிழருக்கு பாதுகாப்பு - உரிமை இந்தியா பெற்றுத் தர வேண்டும்

## இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் வேண்டுகோள்

சென்னை ஜூன் 25 காலாவதியாகாமல் உள்ள இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பும் உரிமையும் பெற்றுக் கொடுக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளரும், எம்பியுமான திரு. தா. பாண்டியன் கோரியிருக்கிறார்.

கச்சதீவில் தமிழக மீனவர்கள் தங்குவதற்கும் தொழில் நடத்துவதற்கும் விழா எடுப்பதற்கும் இந்தியக் கடற்படை தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் திரு. தா. பாண்டியன் தனது கோரிக்கையில் மேலும் கூறியிருக்கிறார்.

திருச்சியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் இக்கோரிக்கைகளை திரு பாண்டியன் விடுத்தார்.

இலங்கையில் தமிழர்கள் மீது தாக்குதல்கள் அதிகமாகி விட்டன. இதை அவர்களின் உள்நாட்டுப் பிரச்சினை என்று கருதாமல் அவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையை மத்திய அரசு எடுத்தாக வேண்டும்

இப்படி திரு. பாண்டியன் சொன்னார். (இ-எ)

## கல்முனை நகரம் சுடுகாடாக காட்சியளிப்பதாகத் தகவல்

கொழும்பு ஜூன் 25 கிழக்கு மாகாணத்தில் கல்முனை நகரம் சுடு காடாக காட்சியளிப்பதாக கொழும்புக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கல்முனை தற்போது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

நகர வீதிகளில் அரைகுறையாக எரிந்த சடலங்கள் காணப்படுகின்றன என்றும் —

பெரும் பாலான கடைகள் சூறையாடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன என்றும்— ஒரு கடையினுள் ஐந்து சடலங்கள் கிடந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதில் மக்கள் அக்கறை காட்டி வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது. (இ-எ)

### கும்பாபிஷேகம்

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோவில் சம்புரோக்ஷன மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறுகின்றது.

கர்மாரம்பம்நேற்று ஞாயிறு மாலை 4 மணிக்கு நடைபெற்றது. (இ-131)

### கூட்டணி உறுப்பினர்கள் வெளிநாடுகளில்

கொழும்பு, ஜூன் 25 தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் பாதுகாப்புக் கருதி வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர்.

இத் தகவலை கூட்டணிப் பிரமுகர் திரு.சிவபாலன் தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (இ-எ)

### கோப்பாய் உ. அ. அதிபர்

கோப்பாய், ஜூன் 25 கோப்பாய் உதவி அரசாங்க அதிபராக சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை தற்காலிகமாக கடமையாற்றி வருகிறார். (இ-72)

## புங்குடுதீவு இருளில்

புகுடுதீவில் மின்சார விநியோகம் முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை, காரைநகர் கடற்படைமுகாம்களில் இருந்து கடந்த 16 ஆம் திகதி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களால் மின் வயர்கள் சேதம் அடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த போது இவற்றைத் திருத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது கைகூடவில்லை. (இ-131)

### ஈ. பி. ஆர். எல். எப் கொலை:

## மத்திய அரசு விசாரணைக்கு கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

சென்னை, ஜூன் 25 கோடம்பாக்கம் தாக்குதலில் ஈ பி. ஆர். எல் எப் இயக்கத்தினர் 14 பேர் கொலையுண்ட சம்பவம் குறித்து இந்திய மத்திய அரசு விசாரணை செய்ய வேண்டும்.

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளரும் எம்பியுமான திரு தா பாண்டியன் முன்கண்டவாறுதெரிவித்தார்.

இம் மாதம் 27ஆம் 28ஆம் திகதிகளில் சென்னை வரும் ஜனாதிபதி வெங்கடராமனிடமும்.

இம் மாதத்திற்குள் புதுடில்லியில் பிரதமர் வி பி. சிங்கிடமும் இக்கோரிக்கை பற்றிய மனுக்களை தோழமைக்கட்சிகளுடன் சேர்ந்து இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி கையளிக்கும்.

இக்கோரிக்கை அடங்கிய மனு ஒன்று தமிழ்நாடு மாநில ஆளுநரிடம் நாளை செவ்வாய்க் கிழமை கையளிக்கப்பட உள்ளது. என்றும் திரு. பாண்டியன் சொன்னார். [இ-எ]

## கமறூன் - செக். அணிகள் கால் இறுதிப் போட்டிக்கு

மிலான் ஜூன்25 உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் கமறூன் அணியும் செக்கோஸ்லேவேகிய அணியும் கால் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெற்றுள்ளன.

இரண்டாவது சுற்றுப் போட்டிகளின் போது, கமறூன் அணி 2-1 கோல்களால் கொலம்பியா அணியை வென்றது.

செக்கோஸ்லேவேகிய அணி, கோஸ்டறிக்கா அணியை4-1 கோல்களால் வென்றது.

கால் இறுதிப்போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெற்றுள்ள முதலாவது ஆபிரிக்க நாடாக கமறூன் இருக்கிறது

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் முதலாவது சுற்று முடிவடைந்து இரண்டாவது சுற்றிலான மோதல்கள் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகின.

இவை நாளை செவ்வாய்க்கிழமை முடிவடையும் முதலாவது சுற்றில் நடந்த ஆட்டங்களின் போது மொத்தமாக 82 கோல்கள் போடப்பட்டன. (இ-எ)

## கொழும்பில் 3 ஆயிரம் அகதிகள் தங்கக் கூடிய பெரிய முகாம்

கொழும்பு ஜூன் 25 கொழும்பில் 3 ஆயிரம் அகதிகள் தங்கக் கூடியதான முகாம் வசதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இப்படி கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது. (இ-எ)

## தீவுப் பகுதிகளுக்கான படகுச் சேவை நிறுத்தம்

புங்குடுதீவு, ஜூன் 25 தீவுப் பகுதிகளுக்கான சகல படகுப் போக்குவரத்துக்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் இப்பகுதி மக்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை கொள்வனவு செய்ய முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்

குறிகாட்டுவான் துறையில் இருந்து நயினாதீவு நெடுந்தீவு ஆகிய பகுதிகளுக்கும் ஊர்காவற்றுறையில் இருந்து அனலைதீவு, நெடுந்தீவுப் பகுதிகளுக்குமான படகுச் சேவைகளே நிறுத்தப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை, காரைநகர், நயினாதீவுப் பகுதிகளில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதே படகுச் சேவைகள் நிறுத்தப்பட்டதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தனியார் படகுகள் சில சேவை நடத்தி வருகின்றன. [இ-131]

## படகிலிருந்த பயணிகள் சிலர் கடற்படையினரால் தாக்குதல்

புங்குடுதீவு, ஜூன் 25 நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் படகு ஒன்றில் இருந்தவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

இந்தச் சம்பவம் கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

பிரஸ்தாப படகு நயினாதீவில் இருந்து குறிகாட்டுவான் இறங்கு துறையை நோக்கி வந்துகொண்டிருந்த சமயம் நயினாதீவு கடற்படை முகாமைச் சேர்ந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் விசைப்படகில் வந்து இந்த படகை வழி மறித்தனர். படகில் இருந்த பயணிகள் சோதனை இடப்பட்ட போது புலிப் பல்லுச் சின்னம் கொண்ட பதக்கம் உள்ள சங்கிலி அணிந்திருந்த ஒருவர் கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார். படகில் இருந்த வயோதிபர்களும் இருவர் தாக்கப்பட்டனர்.

இத்தாக்குதலை அடுத்து பிரஸ்தாப படகு ஒரு பயணத்துடன் தனது சேவையை நிறுத்திக் கொண்டது (இ-31)

## அடம்பன், மாந்தைப் பகுதி மக்களும் இடம் பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 25 மன்னார் மாவட்டத்திலிருந்தும், அச்சம் காரணமாக மக்கள் பலர் யாழ்ப்பாணம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

திருக்கேதீஸ்வரம்கோவிலை அண்டிய மாந்தை, அடம்பன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பலர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்களில் பலர் சங்குப்பிட்டி வரை நடந்து வந்து பின்னர் அங்கிருந்து மினி பஸ்களில் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

கொண்டச்சி இராணுவ முகாம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அடம்பனிலும் ஹெலி, பொம்மர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்றும் — அதனைத் தொடர்ந்தே தாம் இங்கு வருவதாகவும் நல்லூர் கந்தசாமி கோவிலடியில் வந்திறங்கிய மாந்தை வாசிகள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

மன்னார் நகரப் பகுதியில் கடந்த ஒரு வாரம் கடும் தாக்குதல்... என்றும் அவர்கள் கூறினார். (இ)

### தமிழாராய்ச்சி மையம்

சென்னை, ஜூன் 25 தொல்காப்பியத்தை அரங்கேற்றிய அறங்கோட்டாசானின் பிறப்பிடமாகிய அறங்கோட்டில் தமிழாராய்ச்சி மையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

முதலமைச்சர் கருணாநிதியின் செயலாளர் திரு. எல். கணேசன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். (இ-எ)

## உயிர் தப்பி யாழ். வந்த பெண்களுக்குஏற்பட்டசோதனை

யாழ்ப்பாணம், ஜூன் 25 திருகோணமலையில்பல இன்னல்களுக்கு ஆளாகி உயிர் தப்பி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இரு பெண்கள் தமது சூட்கேஸை இழந்த நிலையில் நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில் அழுது கொண்டிருந்தனர். சேரதீவில் தாம் பஸ் மாறியதாகவும் அப்போது பஸ்ஸின் மேல் தட்டில் வைக்கப்பட்ட தமது சூட்கேஸ் இங்கு வந்து பார்த்த போது காணாமல் போயிருந்தது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சூட்கேஸுக்குள் நகையும், ஒருதொகைப்பணமும் உடுபுடைவைகளும் இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

# வவுனியா நகரில் இருந்த தமிழரின் சொத்துக்கள் முற்றாக நாசம்

## மடுவுக்கு இடம்பெயர்ந்து யாழ். வருகிறார்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 25 வவுனியா நகரப் பகுதியில் வாழ்ந்த தமிழர்கள், அங்கிருந்து எட்டு மைல்களுக்கு அப்பால் விரட்டப்பட்டுள்ளனர். அவர்களது சொத்துக்களும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்தவர்கள் இந்தத் திடுக்கிடும் தகவல்களைத் தெரிவித்தனர்.

வவுனியா நகரப் பகுதியில் வாழ்ந்து பாதிக்கப்பட்ட பலரும் நேற்றும், நேற்று முன்தினமும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கடந்த பத்து நாட்களாக அங்கு தொடர்ந்து அனர்த்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வவுனியாவில் நடந்தவை பற்றி அங்கிருந்து வந்தவர்கள் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

கடந்த 13 ஆம் திகதி புதன் கிழமை வவுனியா பொலீஸ் நிலையம் தாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஓரளவு மக்கள் நகரத்தைவிட்டு வெளியேறினார்கள்.

14 ஆம் திகதி இரவு நகரில் உள்ள கடைகள் "புல்டோசர்"களினால் உடைக்கப்பட்டு பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டன.

### கொள்ளை, தீக்கிரை

16 ஆம் திகதி காலை நகரத்துக்குச் சென்று பார்த்த போது அங்குள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கடைகள் கொள்ளையிடப்பட்டதை அறிய முடிந்தது. 15க்கும் மேற்பட்ட கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. வாகன சுத்திகரிப்பு நிலையம் (சேவிஸ் ஸ்ரேசன்) ஒன்றும் தீயிடப்பட்டது. நகரில் இருந்த ஹட்டன் நாஷனல் வங்கியும் உடைக்கப்பட்டிருந்தது.

### கொலைகள்

கொள்ளை, தீவைப்புச் சம்பவங்கள் நடந்த தினத்தன்று, பொது சுகாதாரப் பரிசோதகர் அந்தோனிப்பிள்ளை உட்பட அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அத்துடன் பொதுமக்களில் மற்றும் ஐந்து பேரும் கொல்லப்பட்டனர்.

சம்பவங்களை தொடர்ந்து தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேறினார்கள் நகரத்தில் இருந்து எட்டு மைலுக்கு அப்பால் ஓமந்தை வரை விரட்டப்பட்டுள்ளனர்.ஆனால் சிங்கள மக்கள் இராணுவ முகாம்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனர்,

மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் வீச்சுக்களும், ஹெலித் தாக்குதல்களும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இந்தக் கொடூரங்களைத் தொடர்ந்து வவுனியவவின் பல பகுதிகளையும் சேர்ந்த மக்கள் ஓமந்தையிலிருந்து மடுவுக்குக் கால் நடையாகச் சென்றனர். அங்கிருந்து கிடைத்த வாகனங்களில் சிலர் யாழ்ப்பாணம் வந்தனர். பலரும் கால்நடையாக அங்கிருந்து இங்கு வருவதற்கு உத்தேசித்துள்ளனர். (அ-3)

## இந்தியா சமரசம் செய்ய முன்வந்தால் ஏற்போம்- ரஞ்சன்

யாழ்ப்பாணம், ஜூன் 25 இலங்கையின் பிரச்சினையில் இந்தியா தலையீடு செய்ய நாம் இனியும் அனுமதிக்கப்போவதில்லை.

ஆனால் அது சமரச முயற்சியில் ஈடுபட விரும்பினால் நாம் அதற்குத் தடையாக இருக்கமாட்டோம்.

சமரசம் செய்வதற்கு யார் முன்வந்தாலும் நாம் அதனை ஏற்றுக்கொள்வோம்.

இவ்வாறு பாதுகாப்பு துணைஅமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்தினா பி. பி. சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் பல கேள்விகளுக்கும் அளித்த பதில்கள் ஏற்கனவே அவர் செய்தியாளர் மாநாடுகளில் தெரிவித்த கருத்துக்களே

### யாழ். கோட்டையில்

புதிய தகவல்களை வெளியிட்ட ஒரு கேள்வியும் பதிலும் வருமாறு:-

கேள்வி: வடபுலத்தில் நிலைமை வேறாக இருப்பது போல் தெரிகிறதே. பலாலியிலும் யாழ். கோட்டையிலும் படையினர் முற்றுகைக்குள்ளாகியிருப்பதுபோல்தெரிகிறது புலிகள் வடபுலத்தை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர முயல்கிறார்கள் என நினைக்கிறீர்களா?

பதில்; யாழ். கோட்டையைப் பிடிக்கஅவர்கள் முயற்சி செய்கிறார்கள் என்பது வெளிப்படை. பலாலியிலும் எம்மை முறியடிக்க முயற்சி செய்கிறார்கள். பலாலி எமது கட்டுப்பாட்டில் உள்ளது. எமது படைகள் அங்கு இருக்கின்றன கோட்டை மிகவும் சிக்கலானது. நாம் பொதுமக்களுக்குத் தீங்குவிளைவிக்க விரும்பவில்லை. இராணுவமும், பொலீசாரும் சேர்த்து 224 பேர் கோட்டைக்குள் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு நாம் உணவுப் பொருள்கள் போட்டோம். விடுதலைப் புலிகள் புல்டோசரின் உதவியுடன் கோட்டைக்குள் நுழைய முயன்றனர். இந்த முயற்சியை நாம் முறியடித்து விட்டோம். பொதுமக்களைக் காப்பாற்றும்பொருட்டுகோட்டையை சுற்றியும் பலாலியை சுற்றியும் துண்டுப் பிரசுரங்கள் போட்டுவிட்டோம். (அ-9)

## நெருக்கடி நிலையை தீர்க்க எஸ். டி. கூறும் ஆலோசனை

கொழும்பு, ஜூன் 25 அனைத்துக் கட்சிகளும் ஒன்றுகூடி புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குவதன் மூலம்தான் நாட்டின் இன்றைய நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும்.

இப்படி முன்னாள் சம்பஹா எம். பியான திரு எஸ் டி. பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இலங்கை முற்போக்கு முன்னணியின் ஏருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்று கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெற்றது.

அதற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் முன்னணியின் தலைவரான திரு. பண்டாரநாயக்கா இக்கருத்தை வெளியிட்டார்.

வெஸ்ட் மினிஸ்டர் அமைப்பிலான அரசு முறை காரணமாகத்தான் நாட்டில் நெருக்கடிதோன்றி இருப்பதாகவும்அவர் சொன்னார்.

### அவசரமாக 2500 பஸ்கள்

கொழும்பு. ஜூன் 25 அவசரமாக 2 ஆயிரத்து500 பஸ்களை இறக்குமதி செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

டிப்போக்கள், தனிநபர்கள், மாகாணசபைகள் இந்த பஸ்களைக் கொள்வனவு செய்ய முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## மலையகத்தமிழர் கைதாவது நிறுத்தப்படும் என்கிறார் ரஞ்சன்

கொழும்பு, ஜூன் 25 மலையகத் தமிழர் அனாவசியமாகக் கைது செய்யப்படுவது நிறுத்தப்படும் என்று பாதுகாப்புத்துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

மலையகத்தமிழர்கள் அனாவசியமான பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றுஇ. தொ. க. பொதுச் செயலாளரும் துணைஅமைச்சருமான எம் எஸ். செல்லச்சாமி வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (இ-எ)

### நில அதிர்வுகள்

தெஹ்ரான்,ஜூன் 25 கடந்த புதன் கிழமை இரவு ஏற்பட்ட கடுமையான பூகம்பத்தின் பின்னர் ஈரானில் மேலும் 200 நில அதிர்வுகள் ஏற்பட்டன என்று அறிவிக்கப்பட்டது.

## மட்டக்களப்புஉணவுகளஞ்சியம் உடைக்கப்பட்டுக் கொள்ளை

கொழும்பு ஜூன் 25 மட்டக்களப்பு உணவுக் களஞ்சியம் கடந்த வியாழக்கிழமை உடைக்கப்பட்டு கொள்ளை இடப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இரண்டு மாதங்களுக்குப் போதுமான கோதுமையா அந்த களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததாக கொழும்பு உணவுத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-எ]

## சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் சேதமுற்றது

ஊர்காவற்றுறை ஜூன்25 காரைநகர் றெட்பாணா கட்டடத்தில் அமைந்துள்ள ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் காரைநகர்கடற்படை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களினால் சேதமடைந்துள்ளது.

தொடர்ந்து வீசப்படும் ஷெல்காரணமாக இக்காரியாலயத்திற்கு சுகாதாரஊழியர்கள் கடமைக்குச் செல்ல முடியாதுள்ளது.

இக் காரியாலயத்திற்கு அண்மையிலுள்ள மக்கள் ஏற்கனவே குடியமர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-18)

### காரை நகரில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உக்கிரமான பல் தாக்குதல்களினால் இம் முயற்சி முறியடிக்கப்பட்டது.

உயிரிழப்புக்கள் பற்றித் தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை) (ஒ-ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயன்

25 - 06 - 1990 திங்கட்கிழமை




## சாம்பல்தீவுவந்த அகதிகள் திரியாய்க்கு இடம் பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 25

திருமலை நகரில் இருந்து அகதிகளாக சாம்பல்தீவு வந்தவர்களில் பலர் தற்போது திரியாயை நோக்கி இடம் பெயர்கின்றனர்.

சாம்பல்தீவில் ஹெலி, பொம்மர் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. பொம்மர் தாக்குதலில் இரு வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

வெல்கம் விகாரையிலிருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஷெல்கள் சாம்பல்தீவில் மட்டும் அன்றி நிலாவெளியிலும் விழுந்து வெடிக்கின்றன. நிலாவெளி ஆஸ்பத்திரியில் ஷெல் காயங்களுக்குப் பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ)

## தமிழர்களின் வீடுகளில் குண்டர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூன் 25

திருமலையில், தமிழர்களின் வீடுகள் பல குண்டர்களினால் கொள்ளை அடிக்கப்படுகின்றன.

தமிழர்களின் வீடுகளில் இருந்த டி.வி., டெக் போன்ற பெறுமதியான பொருள்கள் கந்தளாய் மார்க்கமாக எடுத்துச் செல்லப்படுகின்றன என்று அங்கிருந்து வரும் மக்கள் தெரிவிக்கிறார்கள். (இ)

## சம்பந்தனின் வீடும் தீக்கிரை

திருகோணமலை நகரப் பகுதியில் உள்ள முன்னாள் எம்.பி. திரு. இரா சம்பந்தனின் வீடும் குண்டர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

திருமலை நகரில் தமிழர்கள் பலரின் வீடுகள் சிலரினால் அடையாளம் காட்டப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறது. (இ)

## யாழ். செயலக ஊழியருக்கு அரச அதிபர் அழைப்பு

யாழ். அரசாங்க செயலகத்தைச் சேர்ந்த சகலஊழியர்களையும் இன்று திங்கட்கிழமை வேலைக்கு சமுகமளிக்குமாறு யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவசர நிவாரண வேலைகள் மேற்கொள்ள ஊழியர்கள் தேவைப்படுவதாலேயே இந்த அவசர அழைப்பு விடுக்கப்படுகிறது என்று அரச அதிபர் கூறினார். (ஒ-3)

## வாகனங்கள் மீது நேற்று ஹெலியிலிருந்து தாக்குதல்

காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதிகளில் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை வீதியில் சென்ற வாகனங்கள் மீது ஹெலிகொப்டர் ஒன்று சுற்றிச் சுற்றி வேட்டுகளைத் தீர்த்தது.

சிமெந்து எடுக்கச் சென்ற லொறி மீதும், வீட்டுப் பொருள்களை எடுக்கச் சென்ற லொறி மீதும். காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்துக்குச் சென்ற லொறி மீதும் வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

அத்துடன் மயிலிட்டி, கட்டுவன், வபாவிளான் பகுதிகளில் காலை 10 மணியளவில் பொம்மர் குண்டுத் தாக்குதலை நடத்தியது. (ஒ-68)

## வலி. வடக்கு மக்களுக்கு நான்கு அகதி முகாம்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வலி- வடக்குப் பகுதியில் இருந்து பதற்றம் காரணமாக வெளியேறிய மக்களுக்கு நாங்கு அகதி முகாம்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

அங்கிருந்து வெளியேறிய மக்கள் பல்வேறு பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் இப்போது தஞ்சம் அடைந்துள்ளனர்.

அவர்களுக்கு சுகாதார வசதிகள் குறைவாக இருப்பதை அடுத்து சுன்னாகம் ஸ்கந்தவிரோதயாக்கல்லூரி, சுன்னாகம் ஐயனார் கோவில், தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயம், மருதனார்மடம் கிறிஸ்தவ ஆச்சிரமம் ஆகிய நான்கு முகாம்களில் அவர்களைத் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த முகாம்கள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் இயங்கத் தொடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்த முகாம்களில் சுகாதார, முதலுதவிக் குழுக்களையும் அமைக்க முடிவாகி உள்ளது. (ஒ-3)

## மருந்துக்கடை இடமாற்றம்

இப்போதய சூழ்நிலையில் பாதுகாப்புக் கருதி எமது ஸ்தாபனம் கீழ்காணும் முகவரிக்கு மாற்றி உள்ளோம்.

★ ஆயுள்வேத மருந்துகள்
★ மருந்துச் சரக்குகள்
★ கோவில் அபிஷேகச் சாமான்கள்

விற்பனையாளர்

**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**

4, பலாலி வீதி, 2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்திக்கு அண்மையில்)

(C/4768)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கண்ணிவெடி, நேரடி மோதலில் படையினர் 16 பேர் உயிரிழப்பு

## அரச அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஜூன் 25

கடந்த 24 மணி நேரத்தில் வடக்கு, கிழக்கில் பாதுகாப்புப் படையினர் 16 பேர் கொல்லப்பட்டதாக அரசு அறிவிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

கிழக்கில் பதவியா - புல்மோட்டை வீதியில் — 12 ஆவது மைல் கல் அருகில் நிலக்கண்ணியில் சிக்கி 9 சிப்பாய்கள் பலியாகினர். மற்றும் மூன்று பேர் படுசாயமடைந்தனர்.

வடக்கில் காங்கேசன்துறை-தொண்டமானாறு வீதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் இராணுவ அதிகாரி ஒருவரும் 6 சிப்பாய்களும் உயிரிழந்தனர் என்று அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் நேற்று (ஞாயிறு) நண்பகலுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பாதுகாப்புப் படையினர் தங்கள் நிலையைப் பல இடங்களில் மேலும் பலப்படுத்தி உள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

★ வெலிஓயாவில் கண்ணிவெடிகளை அகற்றுவதில் ஈடுபட்டிருந்த ஆயுதப்படையினர் இருவர் கடுமையாகக் காயமடைந்தனர்.

★ மட்டக்களப்பு மாவட்டத்தில் பலமுனைகளில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் படையினர் அடுத்த 24 மணி நேரத்தினுள் மட்டக்களப்புப் பகுதியைச் சென்றடைந்து விடுவர்.

★ மட்டக்களப்பிலும் அம்பாறையிலும் வீதித்தடைகளையும் நிலக்கண்ணி வெடிகளையும் அகற்றும் வேலைகளில் ஆயுதப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

★ பாதிக்கப்பட்ட இடங்களில் கண்காணிப்புக் குழுக்களை அமைக்க அரசு முக்கியத்துவம் அளித்துள்ளது.

★ வடமாகாணத்தில் விடுதலைப் புலிகள் யாழ். கோட்டை, பலாலி விமானத்தளம், காரைநகர் முகாம் ஆகியவற்றைத் தொடர்ந்தும் தாக்கி வருகின்றனர்.

வடக்கில் 11 போராளிகள் கொல்லப்பட்டனர். அதிகமானோர் காயமடைந்தனர் —என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## உணவு வாங்குவதற்காக சைக்கிளை விற்ற அகதி!

யாழ்ப்பாணம், ஜூன் 25

மனிதனுக்குக் சஷ்டம் வந்தால் அடுத்துத் தொடுத்து வருவது வழக்கம். இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பலர் தமது உயிரைக் காப்பாற்றுவதற்கும் படும் பாடு பெரும் பாடு.

தமது சொந்த வீடுகளையும், ஊர்களையும் விட்டு இடம்பெயர்ந்து அகதிகளாகிகொண்டிருக்கும் தமிழர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

திடீரென இடம்பெயரும் அந்த அகதிகள் தனிப்பட்ட முறையில் படும் சஷ்டங்கள் சில மனதைக் கசிய வைப்பன. சின்னஞ் சிறிசுகளுடன் ஒரு நேர உணவுக்கும் அவர்கள் படும்பாடு!

திருகோணமலையில் இருந்து அகதிகளாக வந்த பாலசுந்தரம் என்பவர் தமது பிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும் உணவு கொடுப்பதற்காக தாம் கஸ்டப்பட்டு எடுத்து வந்த சைக்கிளை விற்றார்.

திருகோணமலையில் இருந்துமுல்லைத்தீவுக்கு சென்ற இவர் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்தவுடன் ஆதரிப்பார் எவரும் இல்லாத நிலையில் தமது சைக்கிளை விற்றார். (அ-3)

## கொழும்பு நகரில் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, ஜூன் 25

கொழும்பு தலைநகரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

போராளிகள் தலைநகரில் தாக்குதல் நடத்தக் கூடும் என்று கருதியே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் ஊகம் தெரிவித்துள்ளன.

கொழும்பில் வாழும் தமிழர்கள் மீது குண்டர்கள் தாக்குதல் நடத்தாமல் பார்த்துக் கொள்ளவே இந்தப் பாதுகாப்பு முஸ்தீபு என்றும் மறுபக்கத்தால் சொல்லப்படுகிறது.

இதேவேளை கொழும்பில் வாழும் தமிழர்களும் சிங்களவர்களும் இப்போதைய நிலை குறித்து வாக்குவாதம் புரிவதை பல நகர அலுவலகங்களில் அவதானிக்கமுடிகிறது)

அதுஒருபுறமிருக்க, கொழும்பில் வாழும் தமிழர்கள் தமது பாதுகாப்பு எப்படியாகும் எனவும் சிந்திக்கத்தொடங்கி உள்ளனர். வேறுபலர், வடக்கு-கிழக்கில் வாழும் தமது உறவினர்களுக்குஎன்னஆயிற்றோ என்று ஏங்குவதையும் காண முடிகிறது. தொலைத் தொடர்பு தபால் தொடர்பு வசதி எதுவும் இல்லாததால் அவர்கள் எவ்விதத் தகவலையும் பெறமுடியாது தவிக்கின்றனர். (அ-9]

## பத்திரகாளி ஆலய மணி அறுந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 25

திருகோணமலையில் 13 ஆம் திகதி மாலை சண்டை தொடங்கியது. அதற்கு இரு தினங்களுக்கு முன்னர் அதாவது 11 ஆம் திகதி திருமலை நகரின் பிரசித்தி பெற்ற ஆலயமான பத்திரகாளி கோயில் மணி அறுந்து விழுந்து விட்டது.

திருமலையைக் காக்கும் பத்திரகாளி கோயில் மணி அறுந்து விழுந்ததைத் திருமலை மக்கள் ஓர் அபசகுனமாகக் கருதுகிறார்கள் என்று திருமலையில் இருந்து வரும் அகதிகள் தெரிவிக்கிறார்கள். (இ)

## பனம் பொருள் ஊழியர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். தெங்குபனம்பொருள் கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம் மற்றும் வடமாகாண தெங்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்க சமாசம் ஆகிய காரியாலயங்கள் திருநெல்வேலி விவசாயப் பயிற்சிப் பாடசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் புதன் கிழமை காலை 10 மணிக்கு சம்பந்தப்பட்ட சகல ஊழியர்களையும் அங்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஒ-3)

## மானிப்பாயில் புதிய வார்ட்

யாழ்ப்பாணம், ஜூன் 25

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்திய சாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அடுத்து அங்கு புதிய வார்ட் ஒன்றை யாழ். செஞ்சிலுவைச் சங்கம் அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்த வைத்தியசாலை அமைந்துள்ள பகுதியில் உள்ள அறை ஒன்றைத் துப்பரவு செய்து 20 கட்டில்களையும் அவர்கள் வழங்கியுள்ளனர். (ஒ-3)

# பொதுமக்கள் கொல்லப்படுவதை இந்தியா விரும்பவில்லை - வி. பி. சிங்

புதுடில்லி, ஜூன் 25

இலங்கை நெருக்கடியில் பொதுமக்கள் எவரும் கொல்லப்படுவதை இந்தியா விரும்பவில்லை.

இலங்கையில் உள்ள மக்களின் சனநாயக விருப்பங்களை நிறைவேற்றுவதும் அவசியமாகும்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங் தெரிவித்தார்.

மாலைதீவில் மூன்று நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு பிரதமர் வி.பி. சிங் நேற்று புதுடில்லி திரும்பினார்.

விமான நிலையத்தில் வைத்து பிரதமர் செய்தியாளரிடம் கூறியதாவது:-

இலங்கை நெருக்கடி குறித்து இந்தியா கவலை அடைந்திருக்கிறது.

இலங்கையின் ஒருமைப்பாடு, இறைமை பேணப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது.

அதே நேரத்தில் அங்குள்ள மக்களின் சனநாயக விருப்பங்களையும் நிறைவேற்றுவது அவசியமாகும்.

இலங்கை நெருக்கடியில் பொதுமக்கள் எவரும் கொல்லப்படுவதை இந்தியா விரும்பவில்லை.

தேவையற்ற முறையில் வன்முறை பயன்படுத்தப்படுவதையும் இந்தியா விரும்பவில்லை.

இதனை இந்திய அரசு இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளது.

இலங்கை அரசுடன் தற்போதைய நெருக்கடி பற்றி ராஜதந்திர வழிகளில் புதுடில்லி அரசு தொடர்பு கொண்டுள்ளது.

இலங்கை தமிழ் போராளிகள் இந்தியாவை ஒரு தளமாகப் பாவிக்க புதுடில்லி அரசு ஒரு போதும் அனுமதிக்காது— என்றார்

தாயகம் புறப்படுவதற்கு முன்னர் பிரதமர் சிங் மாலே வில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் சொன்னதாவது:—

இலங்கை அரசுப் படைகள் விடுதலைப்புலிகள் மோதல் தீவிரமடையும் என்று நான் கருதவில்லை.

அப்படித் தீவிரமானால் இந்தியாவுக்கு வரும் அகதிகள் எண்ணிக்கை அதிகரிக்கும் ஆபத்து உள்ளது'' — என்றார். (அ-எ)

## 40 ஆயிரம்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பகுதிகளில் இருந்தும் உடுத்த உடைகளுடன் அகதிகளாக தமிழ் மக்கள் வெளியேறி மடுவில் அமைந்துள்ள அகதி முகாமில் தங்கியுள்ளனர்.

மாற்று உடையின்றிபெரும் கஷ்டப்படுகிறார்கள். உடுத்த உடையுடன் பலர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

அகதிகளுக்கு உணவுப் பற்றாக் குறையும் ஏற்பட்டிருக்கிறது.

அகதிகளாக இப்பகுதிகளில் தங்கியிருப்போர் போக்குவரத்து வசதி இன்மை காரணமாக கால்நடையாக யாழ்ப்பாணம் [illegible] வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [illegible]

### கொழும்பில் சிக்கித்தவிக்கும்

## தமிழர், முஸ்லிம்களை அனுப்ப அரசாங்கம் அவசர ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 25

கொழும்பில் சிக்கித் தவிக்கும் வடக்கு-கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களை அவரவர் பகுதிகளுக்கு அடுத்த 24 மணி நேரத்தில் திருப்பி அனுப்ப அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுத்து வருகிறார் என்று அரசு அறிவித்திருக்கிறது.

இதற்காக நான்கு அல்லது ஐந்து வாகனங்களில் இவர்கள் ஏற்றப்பட்டு, ஒரு வாகன அணியாக (Convoy) அனுப்பப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### வள்ளச் சேவை பாதிக்கப்பட்டதால்

## திருமலை அகதிகள் வருகையில் தடங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

திருகோணமலையில் வசிக்க முடியாத நிலையில், அங்கிருந்து முல்லைத்தீவுக்கு உயிர் தப்பி வரும் அகதிகளை ஏற்றி இறக்கிய வள்ளங்கள் தமது சேவையை நிறுத்திவிட்டதாக அறியவந்தது,

இதனால் திருகோணமலை அகதிகளின் வருகையில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை புல்மோட்டை இராணுவத்தினர் வள்ளம் ஒன்றில் வந்த அகதிகள் மீது நடத்திய தாக்குதலில் சிலர் கொல்லப்பட்டனர் என்றும் --

அதனை அடுத்தே இந்த வள்ளச் சேவை நிறுத்தப்பட்டது என்றும் — கூறப்பட்டது.

இதேவேளை, உயிரைக் காப்பற்றிக் கொள்ள அனேகர் பல இன்னல்களுக்கும் மத்தியில் காடுகள் வழியாக கால்நடையாக வந்துகொண்டிருக்கிறார்களாம். (ஒ-3)

## பாதுகாப்பான இடங்களுக்கு- -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடையாயிருப்பதை பாதுகாப்புப்படையினர் உங்களுக்கு ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

அத்துடன் அவர்கள் மோட்டார் குண்டு சிறு ஆயுதம் போன்றவற்றால் இம் முகாம்களைத் தாக்கியும் வருகின்றனர். காயங்களுக்குள்ளாகிய ஆபத்தான நிலையில் அவதியுறும் இராணுவத்தினரை அப்புறப்படுத்த எத்தனிக்கும் பாதுகாப்புப் படையினரையும் அவர்கள் தாக்குகின்றனர்.

ஆதலினால் இம் முகாம்களுக்கு உணவு, நீர் போன்றவற்றை விநியோகிக்கவும் சாயமடைந்த வீரர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தவும் பாதுகாப்புப் படையினர் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்,

இதனை நிறைவேற்ற தங்களுக்கு உள்ள சகல அதிகாரங்களையும் அவர்கள் பிரயோகிக்க தீர்மானித்துள்ளனர். உங்கள் பாதுகாப்பு குறித்து படையினர் மிகவும் அக்கறையாகவுள்ளனர். ஆதலினால் தாக்குதல்களில் சிக்கிக்கொள்ளாமல் உடனே முகாம்களுக்கு அருகிலுள்ள இடங்களிலிருந்து பாதுகாப்பான இடங்களை நாடிச்செல்லவும்.

இந்த முடிவையிட்டு பாதுகாப்புப் படையினர் தங்கள் ஆழ்ந்த கவலையை தெரிவித்துக் கொள்கின்றனர்.

உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி-- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3)

## பல்கலைக்கழக மாணவர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.பல்கலைக்கழக கலை, விஞ்ஞான, மருத்துவ பீட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 30 மணியளவில் கைலாசபதிகலையரங்கில் நடைபெறும்.

இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரண உதவி மேற்வது சம்பந்தமாக இக்கூட்டத்தில் ஆராயப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## கல்லிறவு முகாம் மூடப்பட்டது

திருகோணமலை கல்லிறவு என்ற இடத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் முகாமை விட்டு வெளியேற முற்பட்டபோது மிதிவெடியில் சிக்கி இரண்டு இராணுவத்தினர் கால்களை இழந்துள்ளனர்.

மேலும் 23 ஆம் திகதி சனிக்கிழமை இந்த முகாமை மூடிக்கொண்டு இராணுவத்தினர் கடல் மார்க்கமாக திருகோணமலைக்கு சென்றுவிட்டனர்.

## மரண அறிவித்தல்

### சு. கிருபாமூர்த்தி

காங்கேசன்துறை முன்னாள் பட்டினசபைத் தலைவரும், நியூ கோ ஸ்தாபனத்தின் (NEW CO SHIPING AGENTS) உரிமையாளரும் ஆகிய சு. கிருபாமூர்த்தி 24.6. 90 அன்று காலமானார்.

இவர் செல்வபாக்கியத்தின் அன்புக் கணவரும், சறோஜினி, ஞானமூர்த்தி, பாலமூர்த்தி, யோகமூர்த்தி, சத்தியமூர்த்தி, சிவமூர்த்தி, சித்திராஞ்சனிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், கியூபேட், லலானி, மேரி ஆகியோரின் மாமனாரும், மிலானி, ரஜீவ், ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு 25. 6. 90 திங்கட்கிழமை காலை 10 00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்,
கியூபேட் எட்மன்ட்

பாக்கிய அகம்,
3 ஆம் கட்டை,
கொக்குவில் கிழக்கு.

(13476)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org